**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.170/2022 மற்றும் அசல் வழக்கு எண்.20/2023**

**அசல் வழக்கு எண்.170/2022**

சண்முகம் **.... வாதி**

**–எதிர்–**

1) ஆண்டியப்பன்

2) சிவக்குமார்

3) ராசம்மாள் **..... பிரதிவாதிகள்**

**அசல் வழக்கு எண்.20/2023**

P. ஆண்டியப்பன் **...வாதி**

**–எதிர்–**

1) P.சண்முகம்

2) S.பிச்சைமுத்து

3) S.கனகராஜு

4) அஞ்சலம் **..... பிரதிவாதிகள்**

மேற்படி இரண்டு வழக்கு தரப்பினர்களும், இரண்டு வழக்கு சொத்துக்களும் மற்றும் மேற்படி இரண்டு வழக்குகளிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஆகியவை ஒன்றாக இருந்த காரணத்தினால், மேற்படி இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரணை நடத்தி தீர்மானம் செய்ய தரப்பினர்களால் இ.ம.எண்.10/2025 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, மேற்படி இரண்டு அசல் வழக்குகளும் ஒன்றாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அசல் வழக்கு எண்.170/2022 வழக்கில் சாட்சி விசாரணை மேற்கொண்டு சான்றாவணங்கள் தாக்கல் செய்ய இரு தரப்பினருக்கும்

அறிவுறுத்தப்பட்டது. மேற்படி இரு வழக்குகளும், எனது முன்னிலையில் கடந்த 09.03.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அசல் வழக்கு எண்.170/2022 ல் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.தியாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், அசல் வழக்கு எண்.20/2023 ல் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.தியாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**<u>பொதுவான தீர்ப்புரை</u>**

அ.வ.எண்.170/2022 வழக்கானது வாதியாகிய சண்முகம் என்பவரால் 1 முதல் 3 வரையான பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண்.20/2023 வழக்கானது வாதியாகிய ஆண்டியப்பன் என்பவரால் 1 முதல் 4 வரையான பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>அசல் வழக்கு எண்.170/2022 ன் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:</u>**

**2)** வாதியும், 1ம் பிரதிவாதியும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன் ஆவார். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். தாவா சொத்து வாதிக்கு தமிழ்நாடு பூமிதான இயக்கம் மூலம் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு அனுபவ உரிமைக்காக (விவசாயம் செய்ய) அளிக்கப்பட்டு, அவர் தாவா சொத்தை அமைதியான முறையில் விவசாயம்

செய்து அவரது குடும்பத்தை நடத்தி வந்தார். தாவா சொத்தை பூமிதான இயக்கத்தின் மூலம் வாதியின் பெயருக்கு பட்டா வழங்கி, தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தில் தற்போது வரை இருந்து வருகிறது.

**3)** தாவா சொத்தில் வாதி ஜுவேந்திரா கிணறு திட்டத்தின் மூலம் விவசாய நிலம் அனுபவம் செய்து வருபவர்களுக்கு அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு மானியத்தில் தாவா சொத்தில் வாதியால் கிணறு வெட்டப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கிணற்றிற்கு வாதியால், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தாவா சொத்தில் வாதி அமைதியான முறையில் யாருடைய இடையூறுமின்றி அனுபவம் செய்து வந்த நிலையில், இவ்வழக்கின் 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை கெடுக்கும் நோக்கத்துடன் தாவா சொத்தில் வாதி விவசாயம் செய்யக்கூடாது என்ற கெட்ட எண்ணம் கொண்டு வாதி அனுபவம் செய்து வரும் தாவா சொத்தில், கடந்த 2020 முதல் அவ்வப்போது சில ஆட்களுடன் வந்து தாவா சொத்தில் வாதி விவசாயம் செய்ய முடியாதபடி இடையூறு செய்வார்கள்.

**4)** மேலும், விவசாய வேலைக்கு வரும் வேலையாட்களிடம் தாவா சொத்தில் விவசாய வேலை செய்ய முடியாதபடி பிரதிவாதிகள் தகராறு செய்வார்கள். வாதி இதை ஊர் பெரியவர்களிடம் சொல்லி, அவ்வப்போது பேசி முடித்து வந்தார். ஆனாலும், ஒவ்வொரு பசிலி ஆண்டிற்கும் விவசாய வேலை செய்ய முற்படும்போதும் பிரதிவாதிகள் ஏதாவது ஒரு பிரச்சினையை உண்டாக்கி வாதியின் அனுபவத்தை இடையூறு செய்த வண்ணம் இருந்தனர். வாதி இதனை ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதனால், வாதியின் விவசாய நிலத்திற்கு வேலை செய்ய வர ஆட்கள் மறுக்கின்றனர்.

**5)** வாதி, கடந்த 10.05.2022 அன்று தனது அனுபவத்தில் உள்ள நிலத்தில் விவசாய வேலைகள் செய்து வந்தார். அப்பொழுது வழக்கின் 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் மற்றும் சில நபர்களுடன் வந்து, வாதியிடம் தகாத வார்த்தைகள் கூறி, தாவா சொத்தில் மீண்டும் விவசாய வேலை செய்து வந்தால், என்ன செய்வோம் என்று தெரியாது என்று தகாத வார்த்தைகளால் வாதியை தாக்க முற்பட்டனர். வாதி சத்தமிடவே, அருகிலுள்ளவர்கள் வந்து பிரதிவாதிகளிடம் பேசி அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக, வாதி கடந்த 01.08.2022 அன்று பாலவிடுதி காவல் நிலையத்தில் புகார் அளித்ததில், காவல் துறையினர் இது உரிமையியல் தொடர்பான பிரச்சினை என்பதால், நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள சொல்லி புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இவ்வழக்கானது வாதியால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>அசல் வழக்கு எண்.170/2022 ல் 1 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு மற்ற பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

**6)** வாதியால், வழக்குரையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பிரதிவாதிகளால் மறுக்கப்படுகின்றது. தாவா பரிகாரம் பெற வாதி எவ்வகையிலும் உரிமையுடையவர் அல்ல. 1 ம் பிரதிவாதியும், வாதியும் சகோதரர்கள் ஆவார்கள். எனவே, தாவா சொத்தைப் பொறுத்து, வாதியும் 1 ம் பிரதிவாதியும் கூட்டுப் பங்குதாரர்கள் ஆவார்கள் என்பதால், தாவா பரிகாரமானது நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா சொத்து விவரங்கள் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரமானது, வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. தாவா சொத்தில், பொது கிணறு மற்றும் பொதுவான மின் இணைப்பு உள்ள விவரத்தை வாதி மறைத்து வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் உள்ள பொது கிணறு மற்றும் மின் இணைப்பை வாதி மற்றும் பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து

பொதுவாக பயன்படுத்தி வருவதை வாதி மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**7)** தாவா சொத்து ஆதியில் பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்வது உண்மை. ஆனால், வாதியும் இந்த 1ம் பிரதிவாதியும் தங்களுக்கு தாவா சொத்தை ஒரு பாகப்பிரிவினை ஆவணம் மூலம் தங்களது சகோதரர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டு அவரவர்களுக்கு பிரிந்த நிலத்தை அவரவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள். வாதி ஜுவேந்திரா திட்டத்தின் கீழ் தாவா சொத்தில் கிணறு வெட்டியதாக சொல்லும் சங்கதி அனைத்தும் பொய். உண்மையில், வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவரும் கூட்டாக சேர்ந்து மேற்படி தாவா சொத்தில் அமைந்துள்ள கிணற்றினை இருவரும் சேர்ந்து செலவுகள் செய்து கிணறு வெட்டினார்கள். மேலும், தாவா சொத்தில் ஏற்பட்டுள்ள மின்இணைப்பு மற்றும் பொதுவான பம்ப்செட் ஆகியவற்றை வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து செலவுகள் செய்து ஏற்படுத்தியுள்ளார்கள். வாதி தாவா சொத்தில் அமைந்துள்ள கிணற்றிற்கு கூட்டாக சேர்ந்து, மின் இணைப்பு விண்ணப்பித்த சமயத்தில் மின் இணைப்பானது தமிழக அரசால் ஒரு நபர் பெயரில் மட்டுமே வழங்கமுடியும் என்ற காரணத்தினால், வாதி மூத்த சகோதரர் என்பதால், அவருடைய பெயரில் தாவா கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

**8)** தாவா சொத்தில், பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ய முற்பட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகின்றது. அவை அனைத்தும் பொய். தாவா சொத்தில், விவசாய வேலை செய்பவர்களை பிரதிவாதிகள் தடுக்க முயன்றதாக சொல்லும் சங்கதிகளும், பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி பாலவிடுதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வதும், பாலவிடுதி காவல் நிலையத்தினர் உரிமையியல் பிரச்சினை என்பதால்

புகாரினை ஏற்க மறுத்ததாக சொல்லும் அனைத்துக் காரணங்களும் பிரதிவாதிகளால் மறுக்கப்படுகின்றது. அவை அனைத்தும் பொய். அவற்றை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

9) தாவா சொத்தில், எந்த தேதியில் இருந்து வாதி தனிப்பட்ட சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருவதாக தனது வழக்குரையில் குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை. இவ்வழக்கிற்கான வழக்குமூலம் சரியல்ல. அவை இவ்வழக்கிற்காக வாதியால் உருவாக்கப்பட்டவை ஆகும். உண்மை விவரங்களை மறைத்து வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி மற்றும் 1ம் பிரதிவாதி சகோதரர்கள் என்பதால், பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட தங்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களைப் பொறுத்து, வாதி மற்றும் 1ம் பிரதிவாதியும் பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டு, அவரவர்களுக்கு பிரிந்த நிலங்களில் விவசாயம் செய்து கொண்டு தாவா சொத்துகளில் பொதுவான கிணர் மற்றும் மின் இணைப்பை ஏற்படுத்தி தாவா சொத்துக்களை அவரவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்தில் உள்ள கிணற்றில், கிழக்குப்பகுதியானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்குப்பகுதியானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி கிணற்றில் அமைக்கப்பட்டுள்ள 5HP மின் பம்ப்செட்டானது, 1ம் பிரதிவாதிக்கு பிரிந்த நிலத்தில் அமைந்துள்ளது என்றும், மேற்படி மின் இணைப்பு வாதி மூத்த சகோதரர் என்பதால், அவருடைய பெயரில் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பொதுவான மின் இணைப்பு மற்றும் பொதுவான கிணற்றில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் பொது உரிமை உள்ளது என்றும் மேற்படி பாகப்பிரிவினையில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

10) மேற்படி, வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால் மேற்படி பாகப்பிரிவினையால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளபடி, வாதியும் பிரதிவாதியும் அவரவர்களுக்கு பிரிந்த

நிலங்களில் மேற்படி தாவா சொத்தில் அமைந்துள்ள பொது கிணறு மற்றும் பொது மின் இணைப்பை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால், வாதி அடிக்கடி இந்த 1ம் பிரதிவாதிக்கு பிரிந்த நிலத்தில், 1ம் பிரதிவாதி பொது கிணறு மற்றும் மின் இணைப்பை பயன்படுத்தி விவசாயம் செய்து வந்ததை வாதி அடிக்கடி இடையூறு செய்து வந்ததால், ஊர் பெரியவர்கள் முன்னிலையில், மேற்படி பிரச்சினையானது எடுத்துச் செல்லப்பட்டு பின்பு பேசி முடிக்கப்பட்டது. அதன் காழ்ப்புணர்வின் காரணமாக, வாதி இந்த 1ம் பிரதிவாதி விவசாயம் செய்து வந்ததை அடிக்கடி இடையூறு செய்து வந்ததால், இந்த பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.20/2023 என்ற வழக்கினை தாக்கல் செய்து, மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

**11)** வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது நிலைநிற்கத்தக்கதல்ல. வாதி தூய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை. வாதி பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தவறான ஆவணங்களுடன் உண்மை நிலவரங்களை மறைத்து வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியே தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தை அடிக்கடி இடையூறு செய்து தொல்லை கொடுத்து வந்து இவ்வழக்கையும் தாக்கல் செய்துள்ளார். எனவே, இவ்வழக்கானது நிலைநிற்கத்தல்ல. எனவே, இவ்வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும்.

**<u>அசல் வழக்கு எண்.20/2023 ல் வாதியால் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:</u>**

**12)** தாவா சொத்து, ஆதியில் பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்டு, மேற்படி தாவா சொத்தில் ஹெக்.2.66.0 ஏர்ஸ் நிலமானது வாதியாகிய ஆண்டியப்பனுக்கும், அவரது சகோதராகிய 1ம் பிரதிவாதி சண்முகம் என்பவருக்கும் கடந்த 30 வருடங்களுக்கு முன்பாக தானமாக கொடுக்கப்பட்ட

நிலமாகும். 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மகன்கள் ஆவார்கள் மற்றும் 4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவியாவார்.

**13)** இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.1920ல் உள்ள ஹெக்.2.66.0 ஏர்ஸ் நிலமானது, வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கூட்டாக தானமாக கொடுக்கப்பட்ட நிலமாகும். மேலும், வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையில் மேற்படி புல எண்ணில் தலா ஹெக்.1.33.0 ஏர்ஸ் நிலமானது, வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பிரிந்து பாத்தியப்பட்டு, வாதி தனக்கு பிரிந்த ஹெக்.1.33.0 ஏர்ஸ் நிலத்தில் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் விவசாய வேலை செய்து வந்துள்ளார்.

**14)** இந்நிலையில், வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவரும் கூட்டாக சேர்ந்து தாவா சொத்தில் ஜுவேந்திர திட்டத்தின் கீழ் இருவரும் பொதுவாக செலவுகள் செய்து, ஒரு பொது கிணற்றினை வெட்டியுள்ளார்கள். மேலும், வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்படி பொதுவான கிணற்றில் கிழக்குப்பகுதியில் உள்ள பாதி கிணறானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்குப்பகுதியில் உள்ள பாதி கிணறானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**15)** மத்திய அரசால் ஜுவேந்திர திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட்டு, வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் போர்வெல் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி திட்டத்தின் கீழ் போர்வெல்லானது, வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால் கூட்டாக கிணறு வெட்டப்பட்டு, வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால் கூட்டாக மோட்டாட் பம்ப்செட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கிணற்றிற்கு மின் இணைப்பானது, ஒரு நபர் பெயரில்தான் வழங்கமுடியும் என்ற காரணத்தினால், 1ம் பிரதிவாதி சண்முகம் மூத்த சகோதரர் என்பதால் அவருடைய பெயரில் மேற்படி கிணற்றிற்கான மின்

இணைப்பானது 5HP மோட்டார் பம்ப்செட்டிற்கு அவரது பெயரில் ஏற்பட்டுள்ளது. மேற்படி, பொது கிணறு மற்றும் பொது மின் இணைப்பைப் பயன்படுத்தி வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவரும் கூட்டாக சேர்ந்து அவரவர்களுக்கு பிரிந்த நிலங்களை அனுபவம் செய்து வரவேண்டும் என்று மேற்படி பாகப்பிரிவினையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

**16)** வாதி மற்றும் பிரதிவாதிகள் குடும்பத்தினருக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் காரணமாக பிரதிவாதிகளின் குடும்பம் மேற்படி தாவா சொத்தில் அமைந்துள்ள பம்ப்செட் மற்றும் கிணற்றில் உள்ள நீரை பயன்படுத்த வாதிக்கு இடையூறு செய்த வந்ததோடு, ஆட்சேபனைகளும் பலகாலமாக செய்து வந்தார்கள். தாவா சொத்தில் உள்ள கிணற்றிற்கான மின் இணைப்பை பொறுத்து தனியான மின் இணைப்பு வசதி பெறுவதற்கு வாதி தமிழ்நாடு மின் வாரியத்தை அணுகியபோது, பிரதிவாதி அதற்கு ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்ட காரணத்தினால், வாதியால் தனியாக அவரது பெயரில் தாவா கிணற்றிற்கு மின் இணைப்பானது பெற இயலவில்லை. இந்நிலையில், 1ம் பிரதிவாதி வேண்டுமென்றே வாதியின் தாவா சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்தையும், தாவா கிணற்றில் மற்றும் மின் இணைப்பில் பம்ப் செட் பயன்படுத்தி, வாதியின் நிலங்களுக்கு நீர் பாய்ச்சி வரும் உரிமையையும், தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்.

**17)** மேற்படி, பொதுவான கிணறு மற்றும் பொதுவான மின் இணைப்பைப் பயன்படுத்தி பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால், மேற்படி பொதுவான கிணறு மற்றும் மின் இணைப்பை வாதி பயன்படுத்தவிடாத வண்ணம் பிரதிவாதிகள் இடையூறு செய்ததால், வாதிக்கு அதிகப்படியான இழப்பும், கஷ்டமும் ஏற்பட்டுவிட்டது. மேற்படி பிரச்சினை சம்மந்தமாக வாதியால், பாலவிடுதி காவல் நிலையத்தில்

புகாரும் அளிக்கப்பட்டுள்ளது. பாலவிடுதி காவல் நிலையத்தினர் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள கூறியதன் அடிப்படையில், இவ்வழக்கானது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியால் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.170/2022 என்ற வழக்கானது உண்மை விவரங்களை மறைத்தும், தாவா சொத்தில் அமைந்துள்ள பொதுவான கிணறு மற்றும் பொதுவான மின் இணைப்பை மறைத்தும் மேற்படி வழக்கானது 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>அசல் வழக்கு எண்.20/2023 ல் 1 முதல் 4 வரையான பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

**18)** தாவா வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. வழக்குரையில் வாதி கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் இந்த பிரதிவாதிகளால் பொய் என்று மறுக்கப்படுகின்றது. தாவா சொத்து ஆதியில் பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்டு, மேற்படி சொத்தில் ஹெக்.2.66.00 ஏர்ஸ் நிலமானது வாதிக்கும், அவரது சகோதரர் 1ம் பிரதிவாதியான சண்முகத்திற்கும் கடந்த 30 வருடங்களுக்கு முன்பாகவே பாத்தியப்பட்டதாக வாதி கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யாகும். வாதியே மேற்படி சங்கதியை நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார். பூமிதான இயக்கத்தால் ஹெக்.2.66.00 ஏர்ஸ் தாவா சொத்தைப் பொறுத்த நிலமானது 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே வழங்கப்பட்ட இடமாகும். மேற்படி நிலத்தை 1ம் பிரதிவாதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார்.

**19)** தாவா சொத்தாகிய புல எண்.1920 ல் ஹெக்.2.66.00 ஏர்ஸ் நிலமானது வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு கூட்டாக வழங்கப்பட்டுள்ளது என்றும், வாதி மற்றும்

1ம் பிரதிவாதிக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டு தலா ஹெக்.1.33.00 ஏர்ஸ் நிலமானது இருவருக்கும் பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்று வாதியால் கூறப்பட்டுள்ள அனைத்தும் பொய்யாகும். தாவா சொத்தானது, 1ம் பிரதிவாதி பெயருக்கு பூமிதான இயக்கத்தால் தானமாக கொடுக்கப்பட்ட நிலமாகும். இந்த பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.170/2022 என்ற வழக்கை வாதி மற்றும் வாதியின் குடும்பத்தினருக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார்.

**20)** தாவா சொத்தில், 1ம் பிரதிவாதி மத்திய அரசின் ஜுவேந்திர திட்டத்தின் கீழ் தனது சொந்த செலவில் கிணறு வெட்டியுள்ளார். மேற்படி கிணறு வெட்டுவதற்கும், மின் இணைப்பு வழங்குவதற்கும், வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து செலவிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது அனைத்தும் பொய்யாகும். உண்மையில், தாவா கிணற்றிலும், மின் இணைப்பிலும் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. பொய்யான சங்கதிகள் கூறி இவ்வழக்கானது வாதியால் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி, இந்நீதிமன்றத்தை தூய்மையான கரங்களுடன் நாடவில்லை. இவ்வழக்கிற்கான வழக்குமூலம் சரியல்ல. எனவே, இவ்வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**21)<u>அசல் வழக்கு எண்.170/2022ல் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட எழுவினாக்கள் பின்வருமாறு:</u>**

| | |
|---|---|
| 1 | Whether the Plaintiff is in permissive possession and enjoyment over the suit property? |
| 2 | Whether the Defendant cause any disturbance to the Plaintiff's possession? |
| 3 | Whether the Plaintiff is entitled to the relief of Permananent Injunction against the Defendants? |
| 4 | To what other relieves the Plaintiff is entitled for? |

**22) அசல் வழக்கு எண்.20/2023 ல் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட எழுவினாக்கள் பின்வருமாறு:**

| | |
|---|---|
| 1 | Whether the Plaintiff is in the enjoyment and possession of the suit property? |
| 2 | Whether the Plaintiff is the absolute owner of the suit property? |
| 3 | Whether the suit is manintainable without seeking declaration? |
| 4 | Whether the Plaintiff is entitled to the relief of Permananent Injunction? |
| 5 | To what other relief? |

**23) அ.வ.எண்.170/2022 ல் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

வாதி தரப்பில், வாதியாகிய சண்முகம் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், ஒரு பெருமாள் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்மூலம் வா.சா.ஆ.4 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இடையப்பட்டி மேற்கு கிராமம், கிராம நிர்வாக அலுவலர் வாதி தரப்பில், வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பு சாட்சியம் வா.சா.3 உடன் முடித்து வைக்கப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதியாகிய ஆண்டியப்பன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் பி.வா.சா.1 உடன் முடித்து வைக்கப்பட்டது.

**தீர்வு:**

**24)** மேற்படி இரு வழக்குகளையும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதில், அசல் வழக்கு எண்.170/2022 ல் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதால், அ.வ.எண்.170/2022 ல் குறிப்பிட்டுள்ளபடி, வழக்கு தரப்பினர்கள் இந்த தீர்ப்பில் வாதி மற்றும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்படுகிறார்கள்.

**<u>அசல் வழக்கு எண்.170/2022 ல் எழுவினா எண்.1 முதல் 3 மற்றும் அசல் வழக்கு எண்.20/2023 ல் எழுவினாக்கள் எண்.1 முதல் 4 ஆகியவற்றிற்கான தீர்வு:</u>**

**25)** நீதியின் நலன் கருதி, மேற்படி அனைத்து எழுவினாக்களுக்கும் ஒன்றாக தீர்வு காண இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. அசல் வழக்கு எண்.170/2022 என்ற வழக்கானது, தாவா சொத்து பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி பூமிதான இயக்கமானது சுமார் 30 வருடங்களுக்கு முன்பு அனுபவ உரிமைக்காக விவசாயம் செய்ய வாதிக்கு வழங்கப்பட்டது என்றும், அதனடிப்படையில் வாதி அவரது குடும்பத்துடன் விவசாயம் செய்து குடியிருந்து வந்ததாகவும், தாவா சொத்தில் வாதி ஜுவேந்திர திட்டத்தின் கீழ் மானியம் பெற்று கிணறு வெட்டி அவரது பெயரில் மின் இணைப்பு பெற்று அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்வதாகவும் கூறி மேற்படி அசல் வழக்கானது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**26)** மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொருட்டு, வாதி தரப்பில் வாதியாகிய சண்முகம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.1 ஆவணமானது, கடந்த 07.10.2022 தேதியிட்ட பட்டா எண்.635 ற்கான கணினி பதிவிறக்க நகலாகும். மேற்படி வா.சா.ஆ.1 யைப் பரிசீலனை செய்கையில், பட்டா எண்.635 ஆனது, இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள பல புல எண்களுக்கும், தாவா சொத்தாகிய புல எண்.1920 ல் உள்ள ஹெக்.2.66.00 ஏர்ஸ் நிலத்திற்கும் பூமிதான இயக்கத்தின் பெயரில் மேற்படி பட்டாவானது அமைந்துள்ளது என்பது தெரிகின்றது.

**27)** வா.சா.ஆ.2 ஆவணமானது, மின் பயனீட்டு கட்டண அட்டையின் அசல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.2 யைப் பரிசீலனை செய்கையில், மேற்படி மின் கட்டண அட்டையானது பாலவிடுதி கிராமத்தில் அமைந்துள்ள மின் இணைப்பு எண்.87 ற்கு வாதியாகிய சண்முகம் பெயரில் 5HP திறனிற்காக மேற்படி மின் கட்டண அட்டையானது வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. வா.சா.ஆ.3 ஆவணமானது, வாதியாகிய சண்முகத்தின் ஆதார் அடையாள அட்டையின் நகலாகும். வா.சா.ஆ.3 ஆவணம் அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு, பின்பு இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வா.சா.ஆ.3 யைப் பரிசீலனை செய்கையில், வாதி செல்வப்பூர் கிராமம், இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் வசித்து வருவது தெரிகிறது.

**28)** இதனைத் தொடர்ந்து, வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை மீண்டும் வலியுறுத்தி குறிப்பிட்டு கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து, வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தாவா சொத்து பூமிதான இயக்கத்தின் பெயரில் இல்லை என்றும், தனது பெயரில்தான் உள்ளது என்றும், தாவா சொத்தில் அமைந்துள்ள கிணறு கூட்டுக் கிணறு இல்லை என்றும், தனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட கிணறு என்றும், தாவா சொத்தில் கிணறு வெட்ட ஜுவேந்திரா திட்டத்தின் கீழ் மனு கொடுத்தபோது, அதில் கையெழுத்து போட சொல்லி 1ம் பிரதிவாதியிடம் தான் கேட்டதாகவும், ஆனால் 1ம் பிரதிவாதி மறுத்துவிட்டதாகவும், 1ம் பிரதிவாதியின் நிலம் மானாவாரி நிலம் என்றும், தாவா கிணற்றைப் பயன்படுத்தி வாதி மட்டுமே சாகுபடி செய்து வருவதாகவும், தாவா கிணற்றுக்கான பம்ப்செட் வாங்குவதற்கு வாதி மட்டுமே பணம் கொடுத்து வாங்கியதாகவும், பணம் தருவதாக 1ம் பிரதிவாதி ஏமாற்றிக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

**29)** மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், பூமிதான இயக்கத்தால் வாதிக்கும் அவரது சகோதரர்களாகிய மூன்று நபர்களுக்கும் சேர்த்து சுமார்

ஏக்.5.56 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றும், வாதியின் சகோதரர்களாகிய சுப்ரமணி மற்றும் பெருமாள் ஆகியோர் தனியாக கிணறு வெட்டிக் கொண்டார்கள் என்றும், அவர்கள் ஒரு மூலையிலும், வாதி ஒரு மூலையிலும் கிணறு வெட்டிக் கொண்டார்கள் என்றும், மேற்படி சுப்ரமணியும் பெருமாளும் கூட்டாக சாகுபடி செய்கிறார்கள் என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். ஆனால், தன்னுடைய நிலத்தில் தான் மட்டுமே தனியாக கிணறு வெட்டி தனியாக சாகுபடி செய்து வருவதாகவும், பிரதிவாதியுடன் சேர்ந்து கூட்டாக சாகுபடி செய்யவில்லை என்று மறுத்து கூறியுள்ளார்.

**30)** வா.சா.1 மேலும், தனது குறுக்கு விசாரணையில் தாவா சொத்தைப் பொறுத்து, வாதியும் பிரதிவாதியும் அவரது இதர சகோதரர்களும் சேர்ந்து ஆவணம் எழுதி பிரித்துக் கொண்டதை ஒப்புக்கொண்டு கூறியுள்ளார். மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், 1ம் பிரதிவாதி தண்ணீர் விட சொல்லி கேட்டதாகவும், ஆனால் வாதி தண்ணீர் விட மறுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், தாவா கிணற்றிற்கு இரண்டு வருடமாக 1ம் பிரதிவாதிக்கு தண்ணீர் கொடுத்தும், அவர் ஒரு ரூபாய் கூட பணம் கொடுக்காத காரணத்தினால் பின்பு 1ம் பிரதிவாதிக்கு தண்ணீர் விடவில்லை என்று குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும், தாவா கிணற்றில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித பாகமும் இல்லை என்றும், வாதிக்கு மட்டுமே முழு சுவாதீனமும், உரிமையும் உள்ளது என்று தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**31)** பின்பு, கடந்த 26.03.2025 தேதியிட்ட குறுக்கு விசாரணையில், வா.சா.1 தாவா சொத்து பூமிதான இயக்கத்துக்கு சொந்தமான நிலம் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தாவா சொத்தை தனது தந்தையாகிய பிச்சைக்காரன் என்பவர் அனுபவம் செய்து வந்ததாகவும், பிச்சைக்காரனுக்கு நான்கு மகன்கள் வாரிசுகள் என்றும், கடந்த 2013ம் வருடம் அவரது தகப்பனார் இறப்பிற்கு பிறகு தாவா சொத்துக்களை நான்கு

சகோதரர்களும் சமமாக பிரித்துக் கொண்டதாகவும், மேற்படி 2013ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் வாதியின் சகோதரர் பெருமாள் இறந்துவிட்டதால், அவருக்கு பதிலாக அவரது மனைவியாகிய காளியம்மாளும், மேற்படி சுப்ரமணி இறந்துவிட்டதால், அவருக்கு பதிலாக அவரது மனைவி சிறும்பாயியும், மற்றும் வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து பாகம் பிரித்து கொண்டதாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் கடந்த 20.02.2013ல் ஏற்படுத்திக்கொண்டுள்ளதாகவும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், மற்ற பாகஸ்தர்கள் அனைவரும் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளதாகவும் ஒப்புக்கொண்டு வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**32)** மேலும், தனது குறுக்கு விசாரணையில் வா.சா.1 மேற்படி பாகப்பத்திரத்தின் அடிப்படையில் 'C' அட்டவணை சொத்துக்கள் தனக்கு ஒதுக்கப்பட்டது என்றும், ஆனால் மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் இன்னும் பதிவு செய்யப்படவில்லை என்றும், 'B' அட்டவணை சொத்துக்கள் 1ம் பிரதிவாதி ஆண்டியப்பனுக்கு பிரிக்கப்பட்டது என்றும், பாகப்பிரிவினையில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைத்தான் இருவரும் அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ளபடி கிணறு மற்றும் மோட்டாரில் தனக்கு பாதி பாத்தியம்தான் வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல், தாவா கிணற்றில் உள்ள மின் இணைப்பு இலவச மின் இணைப்பு என்றும், மேற்படி மின் இணைப்பு பெறுவதற்கு வாதி பணம் எதுவும் செலுத்தவில்லை என்று ஒப்புக்கொண்டு குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**33)** வா.சா.1யைத் தொடர்ந்து, ஒரு பெருமாள் என்பவர் வாதி தரப்பில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் அவரது ஆதார் அடையாள அட்டையின் நகலானது அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு வா.சா.ஆ.4 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.2 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதியின் வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், தாவா சொத்து ஆதியில் பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், பூமிதான இயக்கமானது வாதியின் தந்தையாகிய பிச்சைக்காரனுக்கு தாவா சொத்தைக் கொடுத்தது என்றும், பிச்சைக்காரன் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகன்களாகிய வாதி, 1ம் பிரதிவாதி, பெருமாளின் வாரிசுகள் மற்றும் சுப்ரமணியின் வாரிசுகள் ஆகியோர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பே பிச்சைக்காரனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பாகம் பிரித்துக் கொண்டனர் என்றும், பாகப்பத்திரம் ஏற்படுத்திக் கொண்டு அதில் கண்டுள்ளபடி அவரவர் பாகத்தை அவரவர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், பாகப்பத்திரத்திற்கு பின்னிட்டு கிணற்றை பாதிபாதி பாகமாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

**34)** மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், வாதி மற்றும் பிரதிவாதிக்கு பிரிந்த பாகத்தை அவரவர்கள் தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், ஆனால் 2013ல் ஏற்பட்ட பாகப்பத்திரத்தின்படி தாவா சொத்தில் உள்ள கிணற்றிலும், மின் மோட்டாரிலும் பாதி பாகம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், தற்போது வரை இருவரும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டு குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தற்போது வரை தாவா கிணற்றில் பாதி பாகத்தை 1ம் பிரதிவாதி ஆண்டியப்பன் அனுபவம் செய்து வருகிறார் என்பதையும் வா.சா.2 ஒப்புக்கொண்டு தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**35)** வா.சா.2 யைத் தொடர்ந்து, இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் ஸ்ரீபால் என்பவர் வாதி தரப்பில் வா.சா.3 ஆக

விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.3 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், தனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததன் பேரில், தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளதாகவும், அவர் தற்போது இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், தாவா சொத்து இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் புல எண்.1920 ல் அமைந்துள்ளது என்றும், அதன் மொத்த விஸ்தீரணம் ஹெக்.2.66.00 ஏர்ஸ் என்றும், தாவா சொத்தில் போர்வெல் உள்ளது என்றும், அது பூமிதான இயக்கத்தால் வழங்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது என்றும், தற்போது தாவா சொத்து யாருடைய இடம் என்பதை காண்பிக்க தங்களுடைய அலுவலகத்தில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும், மேற்படி போர்வெல்லுக்கும் மின் மோட்டார் இணைப்பு உள்ளது என்றும், மின் மோட்டார் இணைப்பானது வாதி பெயரில் உள்ளது என்றும், மேற்படி புல எண்ணில் ஏக்.1.33 சென்ட் நிலத்தில் வாதி அவருடைய பங்கில் விவசாயம் செய்து வருவதாகவும், போர்வெல் அமைந்துள்ள இடம் மட்டும் தரிசாக உள்ளது என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

**36)** அதனைத் தொடர்ந்து, வா.சா.3 தனது குறுக்கு விசாரணையில், பூமிதான இயக்கத்தால் வழங்கப்பட்ட தாவா சொத்தைப் பொறுத்து யாருக்கு பாத்தியம் என்று தனக்கு தெரியாது என்றும், மேற்படி இடத்தை அளவு செய்து பார்த்தால் மட்டுமே யார் யார் எவ்வளவு விஸ்தீரணத்தில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று தெரிய வரும் என்றும், தாவா சொத்திற்கான பட்டா, பட்டா எண்.635 ஆனது பூமிதான இயக்கத்தின் பெயரில் உள்ளது என்றும், தனிநபர் பெயரில் இல்லை என்றும், தங்களது அலுவலக ஆவணங்களின்படி தாவா சொத்தைப் பொறுத்து வாதி பெயரில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும், தாவா சொத்தில் உள்ள கிணறு மற்றும் பம்ப்செட் ஆகியவை பொதுவானது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும், அதைப்பற்றி தன்னால் சொல்லமுடியாது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

**37)** மேலும், தாவா சொத்தின் அனுபவம் யாரிடம் உள்ளது என்பதை தன்னால் உறுதியாக கூறமுடியாது என்றும், தாவா சொத்தைப் பற்றிய விவரம் தனக்கு முழுமையாக தெரியாது என்றும், தாவா சொத்தை வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் சிலர் அனுபவம் செய்து வருவதாகவும், ஆனால் அதில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு என்று தன்னால் குறிப்பிட்டு கூற முடியாது என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். வாதி தரப்பு சாட்சியானது, வா.சா.3 உடன் முடிக்கப்பட்டது.

**38)** மறுபுறம், பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதியாகிய ஆண்டியப்பன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், பிரதிவாதிகள் வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.ஆ.1 ஆவணமானது, கடந்த 20.02.2013 தேதியிட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணத்தின் அசல் ஆகும். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், வாதி சண்முகம், 1ம் பிரதிவாதி ஆண்டியப்பன் மற்றும் அவர்களின் சகோதரர்களாகிய பெருமாள் மற்றும் சுப்ரமணி ஆகியோர்களின் மனைவிகளாகிய காளியம்மாள் மற்றும் சிறும்பாயி ஆகியோர்களுக்கு இடையே மேற்படி பாகப்பிரிவினை ஆவணமானது தாவா சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**39)** பி.சா.ஆ.1 ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், பூமிதான இயக்கத்தின் மூலம் பட்டா எண்.635ன் கீழ் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தையான பிச்சைக்காரன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டு கூட்டு குடும்பமாக அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்துக்களை பிரித்து கொள்ள மேற்படி பாகப்பத்திரம்

ஏற்படுத்திக்கொண்டதாகவும் கூறி மேற்படி பாகப்பிரிவினை பத்திரமானது ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**40)** மேலும், பி.சா.ஆ.1 யைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தாகிய புல எண்.1920 ல் ஹெக்.2.66.00 ஏர்ஸ் நிலத்திலும், புல எண்.383/37 ல் ஹெக்.1.06.0 ஏர்ஸ் நிலத்திலும், மொத்தம் ஏக்.9.19 செண்ட்டில் மேற்கு புறத்தில் உள்ள ஏக்.2.48 3/4 செண்ட் நிலமானது குறிப்பிட்ட நான்கு எல்லைகள் கண்டு 'A' அட்டவணையாக காண்பித்து காளியம்மாளுக்கும், அதே மேற்குபகுதியில் உள்ள மேற்படி புல எண்ணில் ஏக்.2.23 1/2 செண்ட் நிலமானது சிறும்பாயிக்கு பாத்தியப்பட்டதாக நான்கு எல்லைகள் கண்டு 'B' அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி புல எண்.1920 ல் ஹெக்.2.66.00 ஏர்ஸ் நிலத்திலும், புல எண்.383/37 ல் ஹெக்.1.06.0 ஏர்ஸ் நிலத்தில் கிழக்குப்பகுதியில் உள்ள மொத்த ஏக்.9.19 செண்ட்–ல் ஏக்.2.23 1/2 செண்ட் நிலமும், அதில் உள்ள கிணறு ஒன்றில் பாதி பாகமும், 5HP மோட்டார் பம்ப்செட் மற்றும் மின் இணைப்பு எண்.87 ல் பாதி பாகமும், போர்வெல் ஒன்றில் பாதி பாகமும், புல எண்.383/37 ல் உள்ள கிணறு ஒன்றில் நான்கில் ஒரு பாகமும், 'C' அட்டவணையாக காட்டப்பட்டு அது வாதி சண்முகத்திற்கு பிரிந்ததாக மேற்படி பாகப்பத்திரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

**41)** அதனைத் தொடர்ந்து, வாதிக்கு பிரிந்துள்ளது போலவே புல எண்.1920 ல் ஹெக்.2.66.00 ஏர்ஸ் நிலத்திலும், புல எண்.383/37 ல் ஹெக்.1.06.0 ஏர்ஸ் நிலத்திலும், கிழக்குப் பகுதியில் உள்ள மொத்த ஏக்.9.19 செண்ட்டில் ஏக்.2.23 1/2 செண்ட் நிலமும், மேற்படி புல எண்.1920 ல் கீழ்ப்புறம் உள்ள கிணறு ஒன்றில் பாதி பாகமும், மேற்படி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5HP மோட்டார் பம்ப்செட் மற்றும் அதன் மின் இணைப்பு.87 ல் பாதி பாகமும், மேற்படி போர்வெல்லில் ஒன்றில் பாதி பாகமும், புல எண்.383/37 ல் கிணறு ஒன்றில் நான்கில் ஒரு

பாகமும், 'D' அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டு, அதை 1ம் பிரதிவாதி ஆண்டியப்பனுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டதாக மேற்படி பாகப்பத்திரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பு சாட்சியானது பி.வா.சா.1 உடன் முடிக்கப்பட்டது.

**42)** இந்நிலையில், அ.வ.எண்.20/2023 ல் நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி, இ.ம.எண்.4/2023 மனுவானது இந்த பிரதிவாதி ஆண்டியப்பனால் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தாவா சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் இந்நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தைப் பொறுத்து வரைபடம் மற்றும் அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது புல எண்.1920 ல் பட்டா எண்.635 ல் பூமிதான இயக்கத்திற்கு சொந்தமான நிலம் என்றும், தாவா சொத்தில் மின் கம்பம் மற்றும் மின் இணைப்பு அமைந்துள்ளது என்றும், மேற்படி மின் இணைப்புக்கான மின் இணைப்பு எண்.87 என்பது வாதி சண்முகத்தின் பெயரில் உள்ளது என்றும், வாதியின் நிலத்தில் உள்ள நிலம் உழவு செய்யப்பட்ட அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும், தண்ணீர் இன்றி வறண்டு காணப்பட்டது என்றும், மீதமுள்ள நிலம் தரிசு நிலமாகவும் இருந்தது என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும், தாவா சொத்தின் இருப்பிடம் மற்றும் அமைவிடத்தின் நான்கு எல்லைகள் குறித்தும் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் தெளிவாக குறிப்பிட்டு கூறியுள்ளார். அதில், தாவா கிணறானது பிரதிவாதியாகிய ஆண்டியப்பன் இடத்தில் அமைந்துள்ளதாக தனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**43)** இரு தரப்பு வாதங்களையும், இரு தரப்பில் முன்னிலைப்படுத்திய சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் இருதரப்பில் தாக்கல் செய்துள்ள

ஆவணங்களையும் கவனமுடன் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது இருதரப்பினர்களாலும் ஒப்புக்கொண்டபடி பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். மேலும், தாவா சொத்து வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனரான பிச்சைக்காரன் என்பவருக்கு பூமிதான இயக்கத்தால் விவசாயம் செய்வதற்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், வாதி தரப்பில் மேற்படி தாவா சொத்து முழுமையும் வாதிக்கு விவசாயம் செய்ய வழங்கப்பட்டதாக வழக்குரையில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா சொத்து தனக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க வாதி தரப்பில் உரிமைமூல ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது.

**44)** மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 பட்டாவைப் பரிசீலனை செய்கையில், இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள தாவா சொத்தாகிய புல எண்.1920 ல் உள்ள ஹெக்.2.66.00 ஏர்ஸ் நிலத்திற்கு மேற்படி பட்டா எண்.635 ல் பூமிதான இயக்கத்தின் பெயரில் மேற்படி பட்டா ஏற்பட்டுள்ளது என்பது தெரிகிறது. எனவே, வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில், தாவா சொத்து பூமிதான இயக்கத்தின் பெயரில் உள்ளதால் பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை அறிய முடிகின்றது. தாவா சொத்து பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால், தாவா சொத்தில் வாதியோ, பிரதிவாதிகளோ அல்லது அவர்களது குடும்பத்தினர்களோ எவ்வகையிலும் உரிமை கோர முடியாது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, அ.வ.எண்.20/2023 ல் எழுவினா எண்.2 ற்கு இதன்மூலம் இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டுள்ளது.

**45)** மேலும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி மட்டுமே மேற்படி இரண்டு வழக்குகளும் வாதி மற்றும் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு

இருக்கும்நிலையில், தாவா சொத்தில் தங்களுக்கு பிரிந்த நிலத்தில் அவரவர்கள் அனுபவம் செய்து வருதவாக இருதரப்பினர்களும் கூறியுள்ள நிலையிலும், தாவா சொத்து பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது தெளிவாக தெரிவதால், தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், தாவா சொத்தின் உரிமைமூலமானது பூமிதான இயக்கத்தின் பேரில் உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**46)** இவ்வாறு இருக்கும் நிலையில், தங்களது சுவாதீனத்தை வைத்து மட்டும் வாதி மற்றும் பிரதிவாதிகள் மேற்படி வழக்குகளை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதாலும், அதில் தங்களது அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே மேற்படி இரண்டு வழக்குகளும் வாதி மற்றும் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி அசல் வழக்கு எண்.20/2023 என்ற வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரப்படாமல் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது நிலைநிற்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்படி அ.வ.எண்.20/2023 ல் எழுந்துள்ள எழுவினா எண்.3 ற்கும் மேற்கண்டவாறே இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டுள்ளது.

**47)** மேலும், தாவா சொத்தில் வாதி அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்தில் உள்ள கிணறு முழுவதும் ஜுவேந்திரா திட்டத்தின் கீழ் மானியம் பெற்று வாதியால் செலவு செய்யது வெட்டப்பட்ட கிணறு என்றும், மேலும் தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பானது வாதியால் அவரது சொந்த செலவுகள் செய்து பெறப்பட்ட மின் இணைப்பு என்றும், தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதி மட்டுமே அனுபவம் செய்து வருவதாகவும், அவற்றை பிரதிவாதிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் இடையூறு செய்வதாகக் கூறி

மேற்படி அ.வ.எண்.170/2022 வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. வாதி தரப்பில், வா.சா.ஆ.2 மின் கட்டண அட்டையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மின் கட்டண அட்டையானது, மின் இணைப்பு எண்.87 ல் 5HP திறனிற்கு வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேற்படி மின் கட்டண அட்டையானது தாவா கிணற்றில் அமைந்துள்ள மின் இணைப்பிற்கு வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்று வாதியால் கூறப்பட்டுள்ளதை பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையிலும், தங்களது சாட்சியங்களிலும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது.

**48)** எனவே, வா.சா.ஆ.2 மின் கட்டண அட்டையானது, தாவா சொத்தில் அமைந்துள்ள கிணற்றிற்கான மின் இணைப்பிற்கு வாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி தாவா கிணறு மற்றும் மின் இணைப்பானது, இருவருக்கும் சமமாக பொதுவாக பாத்தியப்பட்டது என்றும், மின் இணைப்பானது ஒரு நபர் பெயரில் மட்டுமே வழங்கப்படும் என்பதால், வாதி மூத்த நபர் என்பதால் அவருடைய பெயரில் மின் இணைப்பானது வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டு, மேற்படி மின் இணைப்பு மற்றும் மின் கட்டண சங்கதிகள் குறித்து பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

**49)** இந்நிலையில், வாதி தாவா கிணறு மற்றும் மின் இணைப்பு தனக்கு மட்டுமே பாத்தியப்பட்டுள்ளது என்றும், அவற்றைப் பயன்படுத்தி தான் மட்டுமே தனக்கு பிரிந்த நிலத்தில் அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 20.02.20213 ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரம் ஒன்றை பி.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பி.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணமானது, வாதி மற்றும் பிரதிவாதி மற்றும் அவர்களது இதர சகோதரர்களாகிய பெருமாள் மற்றும்

சுப்ரமணி ஆகிய இருவரின் மனைவிகளாலும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரம் என்று பிரதிவாதிகளால் கூறப்பட்டுள்ளது.

**50)** பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள வாதியின் கையொப்பமும் அதில் உள்ள சங்கதிகளும் வாதியால் மறுக்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. மாறாக, அவற்றை வாதி ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். பி.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணத்தை ஒப்புக்கொண்டு வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், பி.சா.ஆ.1 ஆவணமானது, பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணமாக உள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் என்பதால், அவற்றை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும், பி.சா.ஆ.1 பாகப் பத்திரமானது, பாகப்பிரிவினை ஆவண சாட்சியமாக இந்நீதிமன்றத்தால் எடுத்துக்கொள்ள இயலவில்லை என்றாலும், மேற்படி பாகப்பிரிவினை ஆவணமானது இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட காரணத்தினால், இதர பரிவர்த்தனைகளை நிரூபணம் செய்யும் பொருட்டு, மேற்படி பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**51)** பி.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில், தாவா சொத்தாகிய புல எண்.1920 ல் கட்டுப்பட்ட ஹெக்.2.66.00 ஏர்ஸ் நிலமானது, வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தையாகிய பிச்சைக்காரன் என்பவருக்கு பூமிதான இயக்கம் மூலம் பட்டா எண்.635 ல் வழங்கப்பட்டு அவரது அனுபவத்திலிருந்து வந்த சொத்து என்றும், அவரது இறப்பிற்கு பிறகு வாரிசுகளாகிய மேற்படி நபர்கள் மேற்படி சொத்துக்களைப் பொறுத்து மேற்படி பாகப்பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதாக குறிப்பிட்டு மேற்படி பாகப்பத்திரமானது ஏற்பட்டுள்ளது என்றே அறிய முடிகின்றது. தாவா சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட மேற்படி பதிவு

செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா சொத்தின் உரிமைமூலமானது பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றே மேற்படி தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி பாகப்பிரிவினை ஆவணமானது ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நன்கு அறிய முடிகிறது. அவ்வாறு இருக்கும் நிலையில், தாவா சொத்து பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்டிருந்தாலும், பூமிதான இயக்கத்தால் விவசாயம் செய்வதற்காக வாதிகளின் குடும்பத்தினருக்கு தானமாக கொடுக்கப்பட்ட காரணத்தினால், வாதி மற்றும் பிரதிவாதியின் குடும்பத்திற்குள் பிரச்சினை எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, அவரவர்களுக்கு பாகமாக சில பங்குகள் பிரிக்கப்பட்டு, மேற்படி அனுபவம் செய்வதற்கு உகந்தவகையில், மேற்படி பாகப்பிரிவினை ஆவணமானது வாதி மற்றும் 1ம் பிரதிவாதியாலும் மற்ற நபர்களாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

**52)** மேற்படி பி.சா.ஆ.1யைப் பரிசீலனை செய்கையில், அதில் 'C' மற்றும் 'D' அட்டவணை சொத்துக்கள் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி 'C' மற்றும் 'D' அட்டவணை சொத்துக்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தாகிய புல எண்.1920ல் கிழக்குப் பகுதியில் தலா ஏக்.2.23 1/2 சென்ட் நிலமானது, வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், தாவா சொத்தில் அமைந்துள்ள கிழக்குப்புறம் உள்ள கிணறு ஒன்றில் பாதி பாகம் வாதிக்கும், பாதி பாகம் 1ம் பிரதிவாதிக்கும் சமமாக பாத்தியப்பட்டதாகக் கூறி மேற்படி ஆவணம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும், மேற்படி தாவா கிணற்றில் அமைந்துள்ள 5HP பம்ப்செட் மற்றும் அதன் மின் இணைப்பு எண்.87ல் பாதி பாகம் வாதிக்கு பாத்தியம் என்றும், மீதி பாதி பாகம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றும் குறிப்பிட்டு மேற்படி ஆவணம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

**53)** மேலும், மேற்படி பி.சா.ஆ.1 பத்திரத்தின் அடிப்படையில், வாதியும் 1ம் பிரதிவாதியும் அவரவர்களுக்கு பிரிந்த சொத்துக்களைப் பொறுத்து, அவரவர்கள் அனுபவம் செய்து வருவதாக இரு தரப்பினர்களாலும் தங்களது சாட்சியத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வாதியாகிய வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து பற்றியும், அதில் உள்ள சங்கதிகளையும் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், பி.சா.ஆ.1 ஆவணத்தில் தனக்கு பிரிந்த பாகத்தினை தானும், 1ம் பிரதிவாதிக்கு பிரிந்த பாகத்தினை 1ம் பிரதிவாதியும் அனுபவம் செய்து வருவதாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு இருக்கும் நிலையில், தாவா சொத்தில் அமைந்துள்ள தாவா கிணறு மற்றும் மின் இணைப்பானது வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் சமமாக மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில் அனுபவத்திற்காக பிரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**54)** அவ்வாறு இருக்கையில், பி.சா.ஆ.1 ஆவணத்தை வாதி ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், பி.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையிலும் இரு தரப்பினரும் அவரவருக்கு பிரிந்த பாகத்தினை அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ள நிலையில், தாவா கிணறு மற்றும் மின் இணைப்பானது வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் சமமாக அனுபவ பாத்தியப்பட்ட கிணறு மற்றும் மின் இணைப்பு என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், வாதியும் 1ம் பிரதிவாதியும் பி.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில், அவரவர்களுக்கு அனுபவத்திற்காக பிரிந்த தாவா சொத்தினையும், தாவா பொது கிணறு மற்றும் பொது மின் இணைப்பையும் பயன்படுத்த அவர்களுக்கு உரிமையுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**55)** இந்நிலையில், தாவா கிணறு ஜுவேந்திரா திட்டத்தின் கீழ் வாதியால் மானியம் பெறப்பட்டு வெட்டப்பட்ட கிணறு என்றும், தாவா கிணற்றில்

பொருத்தப்பட்டுள்ள 5HP மின் இணைப்பானது வாதியால் தனது சொந்த செலவில் பெறப்பட்ட கிணறு என்றும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்ய வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்பதை அறிய முடிகிறது. மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தாவா கிணற்றிற்கு பொருத்தப்பட்ட மின் இணைப்பானது இலவச மின் இணைப்பு என்பதை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு இருக்கையில், தாவா மின் இணைப்பானது இலவசமாக பெறப்பட்டுள்ளது என்பதால், வாதி தனது வழக்குரையில் தாவா மின் இணைப்பு தனது சொந்த செலவுகள் செய்து பெறப்பட்டது என்று முரண்பாடாக கூறியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**56)** மேலும், தாவா கிணற்றை ஜுவேந்திரா திட்டத்தின் கீழ் மானியம் பெற்றுக் கொண்டு வாதியால் கிணறு வெட்டப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி வாதி கிணறு வெட்டியதற்கான ஆவணங்களோ அல்லது வாதி செலவு செய்ததற்கான ரசீதுகளோ, ஆவணங்களோ எதுவும் வாதியால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. அவ்வாறு இருக்கும்நிலையில், தாவா கிணறு மற்றும் மின் இணைப்பானது வாதியால் மட்டுமே செலவுகள் செய்து ஏற்படுத்தப்பட்டதாக வாதி கூறியுள்ளதை வாதி தரப்பில் நிரூபணம் செய்ய தவறியதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**57)** மேலும், பி.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில், வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தினை பொறுத்து மட்டும் மேற்படி ஆவணத்தை ஏற்றுக்கொள்ள இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில், பி.சா.ஆ.1ன் கீழ் தங்களுக்கு பிரிக்கப்பட்டபடி வாதியும், 1ம் பிரதிவாதியும் தாவா சொத்தை தனித்தனியாக அனுபவம் செய்து வருவதும், தாவா சொத்தில் உள்ள பொதுவான கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு

சமமாக அனுபவம் செய்யும் உரிமை உள்ளது என்பதையும், மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் அறிய முடிகிறது. எனவே, தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவரும் சமமாக கூட்டாக சேர்ந்து பயன்படுத்தி வருவதாக மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக அறிய முடிகின்றது.

**58)** பி.சா.ஆ.1 ஆவணத்தில் சம அனுபவ உரிமையானது, தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில், சமமாக வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியம் உள்ளதாக ஒப்புக்கொண்ட பின்பு, வாதியால் மேற்படி தாவா கிணறு மற்றும் மின் இணைப்பிற்கு முழுமையாக அனுபவ உரிமை கோர வாதி முரண்தடைபட்டுள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், வாதி தரப்பில் தாவா கிணறு மற்றும் மின் இணைப்பிற்கு, தான் மட்டுமே செலவுகள் செய்து மேற்படி இணைப்புகளை தனது பெயரில் பெற்றுள்ளதாக கூறியுள்ளதை நிரூபணம் செய்ய தவறிவிட்டார் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. அவ்வாறு இருக்கும் நிலையில், தாவா சொத்து பூமிதான இயக்கத்திற்கு பாத்தியப்பட்டு, பூமிதான இயக்கத்தின் பேரில் பட்டா இருப்பதால், தாவா சொத்து பூமிதான இயக்கத்திற்கு மட்டுமே சொந்தமான சொத்து என்பதை அறிய முடிகின்றது.

**59)** இருப்பினும், தாவா சொத்து விவசாயம் செய்வதற்காக வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட சொத்து என்பதை அறிய முடிகிறது. அதன் அடிப்படையில், வாதி மற்றும் 1ம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் அவரவர்களுக்குள் பிரச்சினைகளை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி பி.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தி, அவரவர்கள் பங்கினை அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதை அறிய முடிகின்றது. அவ்வாறு இருக்கும் வேளையில், தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி

ஆகிய இருவருக்கும் சமமான அனுபவ உரிமை உள்ளது பாத்தியப்பட்டது என்பதையும் அறிய முடிகின்றது. இவ்வாறு இருக்கும் நிலையில், தாவா சொத்தில் தனக்கு பிரிந்த பகுதியில் வாதியும், பிரதிவாதிக்கு பிரிந்த பகுதியில் 1ம் பிரதிவாதியும் அனுபவம் செய்து வருவதை அறிய முடிகின்றது.

**60)** தாவா சொத்தில் அவரவர்களுக்கு உள்ள அனுபவ உரிமையை வாதி மற்றும் 1ம் பிரதிவாதியானவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வந்தாலும், தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு சமமாக அனுபவ உரிமை உள்ளதால் வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், பொதுவாக வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் சமமான அனுபவ உரிமையுள்ள காரணத்தினால், வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கும் பட்சத்தில், தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் உள்ள 1ம் பிரதிவாதியின் அனுபவ உரிமையானது மீறப்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், வாதி கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கிவிட்டால், 1ம் பிரதிவாதிக்கு அதிகப்படியான இழப்பும், நஷ்டமும் ஏற்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் சமமான அனுபவ உரிமை இருப்பதால், வாதிக்கு ஆதரவாக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற வாதி தகுதியற்றவர் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**61)** எனவே, தாவா கிணறு மற்றும் மின் இணைப்பைப் பொறுத்து வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ள நிலையில், அ.வ.எண்.170/2022ல் ஏற்பட்டுள்ள எழுவினா எண்.1ற்கு இந்நீதிமன்றம் மேற்கண்டவாறு முடிவு

கண்டுள்ளது. தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் சமமான அனுபவ உரிமை உள்ளது என்பதை ஆவணங்களின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்தில் பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்துள்ளதாக கூறியுள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**62)** எனவே, அ.வ.எண்.170/2022 ல் எழுவினா எண்.2 ற்கு வாதிக்கு எதிராக தீர்வு கண்டுள்ளது. மேலும், தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் பொதுவான மற்றும் சமமான அனுபவ உரிமையுள்ளதால், வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. எனவே, அ.வ.எண்.170/2022 ல் எழுவினா எண்.3 ற்கு வாதிக்கு எதிராக இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது.

**63)** அதைப் போலவே, மேற்சொன்ன காரணங்களுக்காக அ.வ.எண்.20/2023 ல் எழுந்துள்ள எழுவினா எண்.1, 4 ஆகிய இரண்டும் இந்த 1ம் பிரதிவாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது. மேற்படி, அசல் வழக்கு எண்.20/2023 ல், தாவா சொத்தில் இவ்வழக்கின் பிரதிவாதியாகிய ஆண்டியப்பன் மற்றும் இவ்வழக்கின் வாதி சண்முகம் ஆகிய இருவருக்கும் தாவா கிணறு மற்றும் மின் இணைப்பில் பொதுவான அனுபவ உரிமை உள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி அசல் வழக்கு எண்.20/2023 ன் எழுவினா எண்.1 ற்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது. மேலும், மேற்படி அ.வ.எண்.20/2023 ல் இந்த பிரதிவாதியால் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. எனவே, அ.வ.எண்.20/2023 ல் எழுந்துள்ள எழுவினா எண்.4 இந்த பிரதிவாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**<u>அ.வ.எண்.170/2022 ல் எழுவினா எண்.4 மற்றும் அ.வ.எண்.20/2023 ல் எழுவினா எண்.5 ஆகியவற்றிற்கான தீர்வு:</u>**

**64)** மேற்படி இரண்டு வழக்குகளிலும் ஏற்பட்டுள்ள அனைத்து எழுவினாக்களுக்கும் இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் வேறு எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

<u>முடிவு:</u>

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக அ.வ.எண்.170/2022 என்ற வழக்கானது தள்ளுபடி செய்யப்படுகின்றது. அ.வ.எண்.170/2022 ல் வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. அதைப் போலவே, அ.வ.எண்.20/2023 என்ற வழக்கானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்படுகின்றது. மேற்படி, அ.வ.எண்.20/2023 ல் வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இரு தரப்பினர்களுக்கும் இடையே உள்ள உறவுமுறைகளைக் கருத்திற்கொண்டு இருவழக்கிலும் செலவுத்தொகை இல்லை என்று இதன் மூலம் உத்தரவிடப்படுகின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாளாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.26 15:59:59 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**

**அசல் வழக்கு எண்.170/2022:**

**வாதி தரப்பு சாட்சி:**

**வா.சா.1** –சண்முகம்

**வா.சா.2**– பெருமாள்

**வா.சா.3**–ஸ்ரீபால்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.1** | 07.10.2022 | பட்டா எண்.635 ற்கான கணினி பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.2** | – | மின் பயனீட்டு கட்டண அட்டையின் அசல் |
| **வா.சா.ஆ.3** | – | வாதியாகிய சண்முகத்தின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| **வா.சா.ஆ.4** | – | வா.சா.2 பெருமாள் என்பவரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :**

**பி.வா.சா.1 –** ஆன்டியப்பன் **(1ம் பிரதிவாதி)**

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| **பி.சா.ஆ.1** | 20.02.2013 | பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணத்தின் அசல் |

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.26 16:00:06 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**